# தமிழ் التاميلية

# ஸகாத் இருவகைப்படும்

**சுன்னத்தான ஸகாத்:**
அதாவது, இறைவனிடம் நன்மையை நாடி ஒரு மனிதன் தன் பொருளாதாரத்திலிருந்து வழங்குகின்ற அனைத்து தருமமும் இதில் அடங்கும்.

## கடமையானது

## அது இருவகைப்படும்

### உடலுக்குரிய ஸகாத்:

இது நோன்பை பூர்த்தி செய்தவுடன் நிறைவேற்றப்படுகின்ற ஆண், பெண், சுதந்திரவான், அடிமை, சிறியோர், முதியோர், என அனைவர் மீதும் கடமையான ஒரு ஸகாத்தாகும்.

### பொருளுக்குரிய ஸகாத்:

இஸ்லாத்தில் பொருளுக்குரிய ஸகாத் என்பது குறித்த பொருளாதாரத்திலிருந்து குறித்த தரப்பினருக்கு அல்லது நிறுவனத்திற்கு மார்க்க கடமையாக நிறைவேற்றப்படும் ஒரு வணக்கம் ஆகும். இது இஸ்லாத்தின் கடமைகளில் மூன்றாம் இடத்தில் உள்ள அதே நேரம்

இது 4 வகைகளாக காணப்படுகின்றது.

### இரு நாணயங்கள்

தங்கம், வெள்ளி அல்லது அதன் இடத்தில் வைத்து நோக்கப்படுகிற அதற்கு நிகரான ஏனைய நாணயங்கள். தங்கத்தில் இருக்க வேண்டிய அளவு 20 மிஸ்கால் (அதாவது 85 கிராம்) வெள்ளியில் இருக்க வேண்டிய அளவு 200 திர்ஹம் (அதாவது 595 கிராம்)




### அஸ்ஸாயிமா

மேய்ச்சலில் ஈடுபடும் கால்நடைகள்:
அதாவது, வருடம் பூராகவோ அல்லது வருடத்தின் அதிக நாட்களோ செலவின்றி மேய்ச்சலில் வளரும் கால்நடைகள். அவை ஒட்டகம்,மாடு ,ஆடு ஆகும்.




### நிலத்தில் இருந்து

விளைச்சலாக கிடைப்பவை:
இவை தானியங்களாகவோ அல்லது கனிகளாகவோ இருக்கலாம் .




### வியாபாரப் பொருட்கள்:

இது விற்பனை நோக்கத்திற்காக தயார்படுத்தப்பட்டுள்ள அனைத்தையும் உள்ளடக்கும்.




# ஸகாத் பெறத் தகுதியுடையோர்

**1 ஃபுகரா ஏழைகள்**

இவர்கள் தங்களின் வாழ்வாதாரத்திற்கு தேவையான எதையும் பெற்றுக் கொள்ளாதவர்கள், அல்லது வாழ்வாதாரத்தில் பகுதி அளவில் பெற்றுக் கொண்டோர்.

**2 மசாக்கீன்**

இவர்கள் மிஸ்கீன்கள்:
அதாவது, வாழ்க்கைக்கு தேவையானவற்றில் பெரும்பகுதியை அல்லது அரைவாசியை பெற்றிருப்பர். ஆனால் ஏனைய தேவைக்காக சிரமப்படுவர். உதாரணமாக ஒருவருக்கு ஒரு வருடத்திற்கு பன்னிரண்டாயிரம் தேவை எனில் ஏழையை பொறுத்தவரை அவனிடம் 6000 இருக்கலாம் அல்லது ஒன்றுமே இல்லாமல் இருக்கலாம் இவனே ஃபகீர் ஆகும். இவ்விடத்தில் மிஸ்கீன் யாரெனில் மேற்குறித்த தொகையில் 6000 , அல்லது அதைவிட அதிகமான தொகையோ அவனிடம் இருக்கலாம். ஆனால், மொத்தத் தொகை அவனிடம் காணப்பட மாட்டாது. இவர்கள் இருவருக்கும் ஒரு வருடத்திற்கு தேவையான தொகை வழங்கப்படும்.

**3 ஸகாத் வசூலிப்போர்**

இவர்கள் ஸகாத்தை வசூலித்து, அதை பாதுகாத்து ,அதை உரியவர்களுக்கு கொண்டு சேர்க்கும் பணியில் ஈடுபடுவோர் . இவர்களை நாட்டு தலைவர் நியமிப்பார். மேலும் , இவர்கள் ஏழைகளாக இருக்க வேண்டும் என நிபந்தனை கிடையாது, மாறாக வசதியுடையவர்களாக இருப்பினும் ஜகாத்திலிருந்து இவர்களுக்கு வழங்கப்படும்.

**4 இஸ்லாத்தின் பால் கவரப்பட்டோர்**

இவர்கள் யாரெனில், இஸ்லாமிய மார்க்கத்தை ஏற்க எதிர்பார்க்கப்படுபவர்கள், அல்லது இஸ்லாத்தை தழுவியோர். இவர்களை உறுதிப்படுத்துவதற்கும் இஸ்லாத்தின் எதிரிகளின் எதிர்ப்பை தணிக்கவும் வழங்கப்படலாம்.

**5 அடிமைகள்**

இதில் மூன்று அம்சங்கள் உள்ளடங்கும்.
01. முஸ்லிமான உரிமைச் சீட்டு எழுதப்பட்ட அடிமையை உரிமையிடல்.
02. முஸ்லிமான அடிமையை உரிமையிடல்.
03. முஸ்லிமான சிறை கைதியை உரிமையிடல்.

**6 கடனாளிகள்**

இவர்கள் சமூக சீர்திருத்த பணிகளுக்காக கடன் பெற்றிருக்கலாம். அல்லது தன் சொந்த தேவைக்காக கடன் பெற்றிருக்கலாம்.

**7 ஃபீசபீலில்லாஹ்:**

"இறை பாதையில்" எனும் போது பாதுகாப்பிற்காக யுத்த களத்தில் செயல்படுவோர். அவர்களுக்கு தேவையான அனைத்து விடயங்களுக்கும் ஸகாத் வழங்கப்படும்.

**8 இப்னுஸ் ஸபீல்**

இவர்கள் யாரெனில் பிரயாணத்தை தொடர முடியாமல் இடை நடுவில் உதவியின்றி நிற்கதியானவர்கள். இவர்கள் தங்கள் சொந்த ஊரை அடைவதற்கான தொகையை வழங்கப்படுவர்.